

சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முன்தினம் (18.09.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் சென்னைப் பல்கலைக்கழகம், இதழியல் மக்கள் தொடர்பியல் துறை மற்றும் சென்னை இந்திய ஒலி ஒளிபரப்பாளர் மன்றம் இணைந்து நடத்தும், முனைவர் வெ. நல்லதம்பி எழுதியுள்ள "ஒலியலை ஓவியர்கள்" என்ற நூலினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமெரிக்க துணைத் தூதரகம் உதவித் தூதர் ஜீன் பிரகன்டி, சென்னை பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பேராசிரியர் ஏழுமலை, பெரியார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் மு. தங்கராசு, இதழியல் மக்கள் தொடர்பியல் துறை இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர் முனைவர் டி.ஆர். கோபாலகிருஷ்ணன், (பொறுப்பு), சென்னை பல்கலைக்கழகத்தின் இதழியல் துறை உதவி பேராசிரியர் ஜெயசக்திவேல், சென்னை வானொலி நிலையத்தின் முன்னாள் இயக்குநர் கமலநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உள்ளனர்.




சென்னையில் ஒருங்கிணைந்த இந்திய வர்த்தக மற்றும் தொழில் சபையான அசோசெம் சார்பில் நடத்தப்படும் MSME தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி மாநாட்டை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று முன்தினம் (18.09.2024) துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், மற்றும் அசோசெம் நிர்வாகிகள் சுதிர் பணிகாசிரி, சக்திவேல் ராமசாமி, தீபக் சூட், மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தன்னுடைய பாதையில் செம்மையாக நிதானத்தோடு செயலாற்றிக் கொண்டிருக்கும்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டின் சரித்திரத்தை மாற்றியமைப்பார்!

## கழக பவள விழாவையொட்டி திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'சன் நியூஸ்' தொலைக்காட்சியில் சிறப்புப் பேட்டி!

**சென்னை, செப். 20- "தன்னுடைய கடமையில் தன்னுடைய பாதையில் செம்மையாக நிதானத்தோடு செயலாற்றிக் கொண்டிருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் சரித்திரத்தை மாற்றியமைப்பார்" என்று திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் "சன் நியூஸ்" தொலைக்காட்சிக்கு அளித்துள்ள சிறப்புப் பேட்டியில் கூறியுள்ளார்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75 ஆம் ஆண்டு பவள விழாவை முன்னிட்டு 'சன் நியூஸ்' தொலைக்காட்சி சிறப்பு ஒளிபரப்பில் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசியதாவது:-

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வயது 75, ஆனாலும் இளமைத் துடிப்போடு அது இயங்கிக் கொண்டே இருக்கின்றது. 1949 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட போது, அது சாமானிய மக்களின் கட்சியாகத்தான் பரிணமித்தது. அறிஞர் அண்ணா அப்போது 'இரட்டைக் குழல் துப்பாக்கி' என்று சொன்னார்.

திராவிட முன்னேற்றக் கழகம் 1949 இல் தொடங்கப்பட்டாலும் கூட, அதற்கு முன்பு அதற்கு நீண்ட அரசியல் பாரம்பரியம் உண்டு. நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம், அதன் வழியில் தொடங்கப்பட்ட திராவிடர் கழகம், இதன் மூன்றிலும் அண்ணா தனது பயணத்தை தொடங்கி நடத்தி வந்திருக்கிறார்.

1944-ல் திராவிடர் கழகம் என பெயர் மாற்றப்பட்ட போது, அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த பெருமையும் அறிஞர் அண்ணா அவர்களுக்கு உண்டு. 1949இல் திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்ததற்குப் பிறகு 'தலைமைப் பதவி பெரியார் அவர்களுக்கு காலியாக இருக்கின்றது' என்று அவர் அறிவித்தார். பிறகு 1956 ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அரசியலுக்கு போகின்ற ஒரு முடிவை எடுத்து, 1957 ஆம் ஆண்டு அது தேர்தல் களத்திற்கு வந்தது.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட காலத்திலேயே அது சாமானிய மக்களை ஈர்த்த ஒரு இயக்கமாக மாறிப்போனது. 50 ஆயிரம் உறுப்பினர்கள் 6 மாதத்தில் திரண்டார்கள். 500 கிளைகள் நாடெங்கும் உருவாகின. மாவட்டங்கள் தோறும் மாநாடுகளை நடத்தியது.

சமூக சீர்திருத்த மாநாடு, மாணவர்கள் மாநாடு, பெண்கள் மாநாடு என்று பல்வேறு தலைப்புகளில் மாநாடுகளை அது நடத்தியது. மாநில மாநாட்டையும் நடத்தியது. அடக்கு முறைக்கும் அது ஆளானது. அறிஞர் அண்ணா எழுதிய ஒரு தலையங்கத்திற்காக ரூபாய் 3000 அபராதம் விதிக்கப்பட்டது. காங்கிரஸ் முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், இந்து அறநிலையத்துறைச் சட்டம், பிற்படுத்தப்பட்டோருக்கான சட்டம் என்று சட்டங்களைக் கொண்டுவந்த போது, காங்கிரசில் இருந்த பிற்போக்குச் சக்திகள் அதனைக் கடுமையாக எதிர்த்து அவரை ஆட்சியில் இருந்து விரட்டிய அந்தக் காலத்தில் - விரட்டிய சக்திகளை எதிர்த்து ஓமந்தூராருக்கு ஆதரவாக அறிஞர் அண்ணா, எழுதிய தலையங்கத்திற்காக கண்டிக்கப்பட்டு மூவாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டபோது, மக்களிடத்தில் அந்த நிதியைக் கோரினார். மக்கள் வாரிவாரி வழங்கினார்கள்.

பேரறிஞர் அண்ணாவினுடைய 'ஆரிய மாயை' நூல் அப்போதுதான் தடை செய்யப்பட்டது. தடைசெய்யப்பட்ட 'ஆரிய மாயை' நூலை 'நாங்கள் தடையை மீறி படிப்போம்' என்று 200 இடங்களுக்கு மேலாக இளைஞர்கள் அதனைப் படித்தார்கள். குலக்குல்வித் திட்டத்தை எதிர்த்து போர்க்களம் கண்டதும் அந்தக் காலக் கட்டத்தில் தான். டால்மியாபுரம் என்ற வட நாட்டுக்காரரின் பெயரை கல்லக் குடியாக மாற்ற வேண்டும் என்று கலைஞர் போராட்டம் நடத்தியதும் அந்தக் காலக்கட்டத்தில் தான்.

1957 இல் தேர்தல் களத்திற்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகம் பல வெற்றிச் சாதனைகளைக் குவித்தது. இந்திய அரசியலிலே முன்மாதிரியான முடிவுகளை பல எடுத்தது. சொல்லப்போனால் திராவிட முன்னேற்றக் கழகம், இன்றைக்கு இந்திய அரசியல் கட்சிகளில் மாநில கட்சிகளில் வேறு எந்தக் கட்சிகளுக்கும், இல்லாத தனி சிறப்புகளை சிறப்பு அம்சங்களை இலட்சியங்களைக் கொண்ட ஒரு கட்சியாகும்.

மூன்று அடிப்படைகளைக் கொண்டு அந்தக் கட்சி இயங்கியது, இயங்கிக் கொண்டும் இருக்கும்.

ஒன்று - மாநிலங்களுக்கான உரிமை.

இரண்டு - சமூக நீதி,

மூன்று - மொழி, இனம் நலம் காக்கும் போராட்டங்கள்.

இந்த அடிப்படை தளங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் உயிர்த்துடிப்போடு இயங்கிக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிந்த காலக் கட்டத்தில் சுதந்திரம் பெற்ற அந்தக் காலக்கட்டத்தில் - தொடர்ந்து காங்கிரஸினுடைய ஆதிக்கம் கொடி கட்டிப் பறந்த அந்தக் காலக் கட்டத்தில்தான் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற ஒரு மாநிலக் கட்சி பிறந்தது.

இந்த வரலாற்றுப் பின்புலத்தில் அன்றைக்கு வட நாட்டு ஆதிக்கம் மிக மோசமாக இருந்த நேரத்தில் 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்ற முழக்கத்தை முன்வைத்து, அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' கொள்கையை முன் வைத்தார். அறிஞர் அண்ணா அவர்கள் கேட்ட 'திராவிட நாடு' கூட மிகவும் அறிவியல் அடிப்படையில் அமைந்த ஒரு கோட்பாடாக இருந்தது.

தென் மாநிலங்கள் தங்களுக்குள் ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு இன வழி கூட நிற்பது. தென்மாநிலங்கள் இணைந்த ஒரு கூட்டாட்சி. அதில் பிரிந்து செல்கின்ற மாநிலங்கள் எந்த நேரத்திலும் பிரிந்து செல்லலாம் என்ற அமைப்போடு கூடிய 'திராவிட நாடு' தான் அண்ணா கேட்ட திராவிட நாடே தவிர, நான்கு மாநிலங்களையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற திராவிட நாட்டை அண்ணா முன்மொழியவில்லை. அதே போல் வட நாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து, தென் நாட்டு வழக்கமான திராவிட நாட்டினை அண்ணா அன்றைக்கு முன் வைத்தார்.

வர்ணாசிரமத்தை எதிர்த்து அனைத்து மக்களுக்கும் கல்வி உரிமை, பணி உரிமை வழங்குகின்ற சமூக நீதி என்கின்ற வகுப்புவாரி உரிமைகளை திராவிட கட்சிகள் அன்றைக்கு வைத்தன. இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பாக தமிழுக்கான உரிமை முழக்கத்தை முன் வைத்தது.

ஆக, மொழி உரிமை, தன்னாட்சி உரிமை, வர்ணாசிரம எதிர்ப்பு என்ற அடித்தளத்தில் உருவாக்கப்பட்ட 'திராவிட முன்னேற்றக் கழகம்' அந்தக் கொள்கை அடித்தளத்தில் தன் பயணத்தைத் துவங்கியது.

**பல்வேறு பண்பு மாற்றங்களை அரசியலில் உருவாக்கிய சாரதனை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. அதில் ஒன்று , மக்களிடம் சென்று மக்களிடம் கருத்துகளைக் கேட்டு, மக்களுக்காக இயக்கங்களை நடத்துகின்ற ஒரு அணுகுமுறை, 'மக்களை நோக்கி' என்று சொல்லப்படுகின்ற அந்த முழக்கத்திற்கு செயல் வடிவம் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம் தான்.**

ஊர் தோறும், கிராமங்கள் தோறும் பரப்புரைக் கூட்டங்கள் ஒவ்வொரு நாளும் நடந்துகொண்டிருந்தன. ஏழை எளிய தொண்டர்கள் மக்களிடம் அரையணா, காலணா, ஓரணா என்று நிதி திரட்டி ஒரு தூசு கொட்டடையில் உடைந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டு பெட்ராமாக்ஸ் விளக்கையும், அரிக்கன் விளக்கையும் வைத்துக் கொண்டு கூட்டம் நடத்திய காலங்கள், அதற்குப் பிறகுதான் மின்சாரம் வந்தது.

தி.மு.க.வில் இருந்து ஏராளமான பேச்சாளர்கள் அன்றைக்கு மக்களிடம் சென்று தமிழ் மொழியையும், இனத்தின் பெருமையையும் வர்ணாசிரமக் கொடுமையையும், மூட நம்பிக்கையையும் எடுத்துக்காட்டினார்கள். மாநாடுகளை நடத்தினார்கள், பேரணிகளை நடத்தினார்கள். இது மட்டுமின்றி அரசியலில் கலைத் துறையைக் கையில் எடுத்து அதனை மக்களிடத்தில் கொண்டுசென்ற தனித்துவமான ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

அந்தக் கட்சிதான் - இந்த இயக்கம்தான் - பல நாடகங்களை அரங்கேற்றியது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பல திரைப்படங்களுக்கு கதை எழுதினார். கலைஞர் பல திரைப்படங்களுக்கு கதை, வசனம் எழுதினார். அந்தத் திரைப்படங்கள் மக்களிடத்தில் பேராதரவைப் பெற்றன. மக்களுடைய சிந்தனைகளைக் கிளர்ந்து எழச் செய்தன. வர்ணாசிரம தர்மத்தையும், சமூகக் கொடுமையையும் பெண்கள் உரிமையையும், வடவர் ஆதிக்கத்தையும் பராசக்தியில் கலைஞர் பேசினார். அண்ணா 'வேலைக்காரி' என்ற நாடகத்தை எழுதினார். 'ஓர் இரவு' நாடகத்தை எழுதினார். 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' என்ற நாடகத்தை எழுதி பார்ப்பனிய சூழ்ச்சியால் சூத்திரர் சிவாஜி மன்னன் எப்படி வீழ்ந்தான்? என்பதை நாட்டுக்கு எடுத்துரைத்தார்.

அதுமட்டுமின்றி அந்த நாடகத்திலே தலைவர்கள் வேடம் ஏற்றார்கள். அண்ணாவும் கலைஞரும் வேடம் ஏற்று நடித்தார்கள். அப்போது ஏராளமான நடிகர்கள் தி.மு.க.விற்கு வந்தார்கள். கே.ஆர்.ராமசாமி, எஸ்.எஸ்.ராஜேந்திரன், நடிகமணி, டி.வி.நாராயணசாமி என்று ஏராளமான நடிகர் பட்டாளம் ஒன்று திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அன்று வந்து சேர்ந்தது. மக்களுக்காக ஏராளமான படிப்பகங்கள் உருவாக்கப்பட்டன. ஏராளமான வாசக சாலைகள் எழுந்து நின்றன. ஏராளமான பத்திரிகைகள் வந்து குவிந்து கொண்டே இருந்தன. திரும்புமிடமெல்லாம் திராவிட இனத்தினுடைய குரலும், வர்ணாசிரம எதிர்ப்பும் பகுத்தறிவுச் சிந்தனையும் தமிழ்மொழிக்கான உரிமையும் பிரளயமாக கிளர்ந்து எழுந்து வளர்ந்து வந்ததுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

**இந்திய அரசியலில் எந்த ஒரு மாநிலக் கட்சியும் இப்படி எளிய மக்களைக் கொண்டு பல்வேறு கருத்தாய்வுகளை கொண்டு கொள்கையை வளர்த்து கொள்கை அடிப்படையில் எழுப்பப்பட்ட கட்சி இந்தியாவில் வேறு எங்கும் தி.மு.க.வுக்கு நிகராக சொல்லி விடவே முடியாது.**

பெரியார் இயக்கத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்து வந்தாலும் சில மனக்கசப்புகள் அந்த நேரத்திலே இருந்தாலும் கூட அவற்றை மிகச் சாதுரியமாக அண்ணா அவர்கள் கையாண்டார்கள் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அண்ணா 'பெரியார்தான் எங்களுக்கு என்றும் தலைவர்' என்று சொன்னார். பெரியார் கடுமையான மொழியில் தி.மு.க.வை விமர்சித்த போது கூட அண்ணா அவர்கள் அதற்கு மறு மொழி கூறாமலேயே தான் இருந்தார்.

1967 ஆம் ஆண்டு 'தேர்தல் கூட்டணி' என்ற ஓர் அணுகுமுறையை இந்திய அரசியலில் புகுத்திய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. எதிர்ப்பு ஓட்டுகள் அனைத்தும் சிதறி விடாமல் ஒன்றாகச்சேர்ந்து காங்கிரசுக்கு எதிராக ஒரு அணியைத் திரட்டி, கூட்டணிக் கட்சிகளை உருவாக்கி ஆட்சியைப் பிடித்தது திராவிட முன்னேற்றக் கழகம். ஆட்சியைப் பிடித்த திராவிட முன்னேற்றக் கழகம் மூன்று முப்பெரும் கொள்கைகளை நாட்டிற்கு அறிவித்தது.

பேரறிஞர் அண்ணா சொன்னார், தமிழ்நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று பெயரிட்டார். சுயமரியாதைத் திருமணத்தை முன்தேதியிட்டு சட்டமியற்றினார். தமிழ்நாட்டின் கொள்கை இரு மொழிக் கொள்கை என்று திட்ட வட்டமாக அறிவித்தார். அந்த இரு மொழிக் கொள்கை இப்போதும் தொடர்ந்து கொண்டுதான்இருக்கின்றது.

தமிழ்நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று அவர் பெயர் சூட்டிய அந்த அடையாளம், தன்னுரிமைக்கான அந்த அடையாளமாக இன்றைக்கு மாறிப்போய் இந்திய அரசியலில் தன்னாட்சி பெற்ற ஒரு கட்சியாக, இன்றைக்கு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இருக்கின்ற கட்சி செயல்பட்டுக் கொண்டு. இந்தியாவிற்கே ஒளிவிளக்காகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

**எல்லாவற்றையும் விட 'கல்வி' என்ற தளத்தில் மிகப் பெரிய புரட்சியை உண்டாக்கிய பெருமை தி.மு.க.விற்கு உண்டு. திராவிட இயக்கத்திற்கு உண்டு. கல்வி என்பது ஒரு திட்டமல்ல; அது ஒரு அரசியல், மக்களுக்காக உருவாக்கப்பட்ட திட்டம். கல்வியை பரப்புகிற திட்டம். எந்த எல்லையைக் கடந்தும் கல்வி என்பது தமிழர்களுடைய கலாச்சாரம் என்ற எல்லைக்குக் கொண்டு சென்ற பெருமை திராவிட இயக்கத்திற்கு உண்டு.**

கல்வியை கலாச்சாரமாக்குவது எப்படி என்று சொன்னால், தமிழ்நாட்டில் வாழ்கின்ற எந்த ஏழை எளிய மக்களாக இருந்தாலும் சரி, எந்த மதத்தை நம்புகிறவர்களாக இருந்தாலும் சரி எந்தக் கடவுளை நம்புகிற மக்களாக இருந்தாலும் சரி அவர்களிடம் இருக்கின்ற ஒருமித்த கலாச்சார கோட்பாடு தங்கள் வீட்டுப் பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டும். அவர்களை உழைப்புச் சந்தையும் உழைப்பாளிகளாக கூலிகளாக அன்றாடங் காட்சிகளாக மாற்றிவிடக் கூடாது, கல்வி ஒன்றுதான் அவர்களைக் கரைசேர்க்கும் என்று திராவிட அரசியல் முன்னெடுத்த கொள்கை, கட்சிகளைக் கடந்து தமிழ்நாட்டினுடைய ஒருமித்த கலாச்சாரமாக இன்றைக்கு ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அதைத் தான் இன்றைக்கு பிற மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கி இருக்கின்றன.

அதே போல கொள்கைகளால் 1949 இல் உருவாக்கப்பட்ட இந்த இயக்கம், இடையிலே பல நெருக்கடிகளை சந்திக்க வேண்டிய வாய்ப்புகள் உருவாகின. அவற்றிலே 1976 அவசர நிலை காலம். மிகக் கொடுமையான ஒரு இருண்ட காலம். பலர் கைது செய்யப்பட்டார்கள். சிறையிலடைக்கப்பட்டார்கள். விடுதலை ஆவார்களா? ஆக மாட்டார்களா? என்ற ஒரு கேள்விக்குறி. இயக்கம் முழுமையாக ஒடுக்கப்பட்டது. எழுத்துரிமை, பேச்சுரிமை, பத்திரிகை உரிமை அனைத்தும் நசுக்கப்பட்டன. அத்தனையையும் எதிர்த்து கிளர்ந்து எழுந்து மீண்டு வந்த பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு.

அதற்குப் பிறகு மாநிலத்திலே ஆட்சி அதிகாரத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றிய ஆட்சியை நிர்ணயிக்கின்ற அதிகாரப் பொறுப்பிற்கும் வந்து சேர்ந்தது. 'தேசிய ஜனநாயக முன்னணி' ஒன்றை உருவாக்குவதில் கலைஞர் மிகப்பெரிய பங்கை உருவாக்கினார். அதற்குப் பிறகு தேசிய முற்போக்கு கூட்டணி ஒன்றை உருவாக்குவதிலும் கலைஞர் மிகப்பெரிய ஒரு பங்கை அவர் உருவாக்கினார். தி.மு.க. இல்லாமல் ஒன்றிய அரசு இயங்காது என்ற ஒரு நிலை. தன்னை படிப்படியாக வளர்த்துக் கொண்ட நிலைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் சென்றது.

கட்சிக்குள்ளே ஒரு ஜனநாயகத்தை - கட்டமைப்பை இன்றைக்கும் பேணிக்காத்துக் கொண்டிருக்கும் ஒரு இயக்கமாக தி.மு.க.தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். இந்திய அரசியலில் சாமான்ய மக்களுக்காக, வெகு மக்களுக்காக சில அடிப்படை உரிமை , வகுப்புரிமை, சனாதன எதிர்ப்பு, தமிழ் இன உரிமை காப்பு என்ற அடிப்படைத் தளங்களின் கீழ் செயல்படுகின்ற ஒரு இயக்கம். இடையிலே ஒரு 13 ஆண்டுகாலம் ஆட்சி அதிகாரக் கட்டமைப்பில் இல்லாத காலத்திலும்கூட, அது எப்படி உயிர்த்துடிப்போடு மீண்டும் களத்திற்கு வந்தது என்று சொன்னால், கலைஞர் என்ற ஒரு மகத்தான ஒரு தலைமையும் அதற்கு அடித்தளமாக இருந்த கொள்கை கோட்பாடுகளும்தான் என்பதை நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

**எனவே கொள்கை கோட்பாடுகள், இலட்சியங்கள், நோக்கங்கள், அதற்கான செயல் திட்டங்கள் இல்லாத எந்த ஒரு இயக்கமும் எந்த ஒரு கவர்ச்சியாலும், அதாவது எப்போதும் மக்களுடைய ஆதரவு இருக்கின்றது என்ற போலித் தனமான பிம்பத்தாலோ நிலைத்து நிற்க முடியாது என்பதுதான் வரலாறு.**

எனவே இலட்சியங்களோடு - இலட்சியப் பாதையில் பிறளாமல், இலட்சியப் பாதையை காலத்திற்கு ஏற்ப வளைத்துக் கொண்டு சென்று செயல்திட்டங்கள் மூலமாக இலக்கை நோக்கும் பயணத்தை உருவாக்குவது என்ற அடிப்படையில் தான் தி.மு.க. தனது பயணத்தை வகுத்துக் கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணாவும் கலைஞரும் அதற்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார்கள்.

Globelization என்று ஒன்று வந்த கால கட்டத்தில், அதற்கு முன் திராவிட முன்னேற்றக் கழகம் சோஷலிசக் கொள்கையை முன் வைத்தது. டாட்டா, பிர்லாவின் ஆதிக்கங்களை எதிர்த்தல், ஆனால் உலகமயமாக்கல், அந்நிய முதலீடுகளை ஈர்ப்பது என்ற கொள்கை வந்ததற்குப் பிறகு அதனைத் தவிர்க்க முடியாத நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு ஏற்றாற் போல் தன்னைத் தகவமைத்துக் கொண்டு, மக்களை பாதிக்காத, முதலீடுகளை ஏற்கக் கூடிய ஒரு கொள்கைக்கு அது வந்து சேர்ந்தது. காலத்திற்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொண்டு இலக்கு நோக்கி செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு இயக்கம் தான், உயிர்த்துடிப்பாக இயங்குகின்ற ஒரு இயக்கம் தான் இருக்க முடியும் என்பதை நாட்டிற்கு தெரிவித்துக் கொண்டிருக்கின்ற இயக்கமாக - கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது.

மண்டல் குழு பரிந்துரையைக் கொண்டு வருவதில் கலைஞர் அவர்கள் முதன்மையாகப் பணியாற்றினார் வி.பி. சிங் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தார் என்று சொன்னால் அகில இந்திய கோட்டாவில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை - சட்டப் போராட்டம் நடத்தி தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்தவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின்.

அறிஞர் அண்ணா கொண்டுவந்த அந்த மூன்று திட்டங்கள் என்றைக்கும் உயிரோடு இருக்கும் என்று சொன்னால் இன்றைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற பெண்ணுரிமைக்கான ஒரு திட்டமாக இருந்தாலும் சரி, காலை சத்துணவுத் திட்டமாக இருந்தாலும் சரி, இந்தத் திட்டங்களை இனி வருகின்ற எந்த ஆட்சியும் அதில் கை வைக்க முடியாது. எனவே என்றைக்கும் மக்களுக்கு நிலையாக - நிரந்தரமாக - அவர்களுக்கு வாழ்வாதாரங்களை தரக்கூடிய திட்டங்களைத் தீட்டி ஒரு கொள்கைப் பார்வையில் வளைந்து கொடுக்காமல் கட்சியை நடத்திச் செல்கின்ற - ஒரு பாங்கு தி.மு.க.வுக்கு இருக்கின்ற ஒரு தனித்துவமான பாங்கு. 75 ஆண்டு கால திராவிட முன்னேற்றக் கழகத்தை - வரலாறு படைத்த தி.மு.க.வை - கட்டிக் காத்து, முன்னோக்கிச் செல்கின்ற ஒரு முக்கியமான வரலாற்றுக் கடமையில் தமிழக முதலமைச்சர் இருக்கிறார்.

அந்த வரலாற்றுக் கடமையில் தன்னுடைய பாதையை அவர் செம்மையாக நிதானத்தோடு செயலாற்றிக் கொண்டிருக்கிறார். இந்தப் பாதையில் அவர் நிச்சயமாக வெற்றி முகட்டை அடைவார். தமிழ்நாட்டின் சரித்திரத்தை மாற்றி அமைப்பார்!

இவ்வாறு திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'சன் நியூஸ்' தொலைக்காட்சியில் உரை நிகழ்த்தினார்.




தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
திருச்சிராப்பள்ளி கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 24 / 2024-25 / தவஅ / நாள்: 12.09.2024

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால், 2024-25-ம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், **நாகப்பட்டினம்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **1 பணி, மயிலாடுதுறை** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **1 பணி மற்றும் திருவாரூர்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **1 பணிக்கு** இணையவழியில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **22.10.2024** அன்று **14.00 மணி** வரை (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் 23.09.2024 முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி-20**

செ.ம.தொ.இ/3741/ஒப்பந்தப்புள்ளி/2024



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம் பொது உறுப்பினர்கள் கூட்டம் தனியார் திருமணமண்டபத்தில்நடைபெற்றது. கூட்டத்திற்குஒன்றியசெயலாளர்ஏ.விஜயகுமார்வரவேற்புரையாற்றினார். கூட்டத்திற்கு கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், சங்கர், கோபால், மற்றும் ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் தி.மு.க. நிர்வாகிகளுக்கு1000, வேட்டி, 1000 கழக இரு வண்ண கொடி, மற்றும் அசைவம் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக ஒருங்கிணைப்புக்குழு ஆய்வுக் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி வழிகாட்டுதலின்படி,கரூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் 18.09.2024 அன்று காலை 9.00 மணியளவில் கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் கழக மாநில மாணவர் அணி தலைவர் இரா.ராஜீவ்காந்தி, கழக மாநில மாணவர் அணி துணை செயலாளர் பி.எம். ஆனந்த், மாவட்ட மாணவர் அணி ஆர்.ஜி.சரவணமூர்த்தி மற்றும் மாவட்ட மாணவர் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்த நாள் நிறைவு விழாவை முன்னிட்டு இலவச கண் சிகிச்சை முகாமில் சிகிச்சை பெற்றவர்களுக்கு கண் கண்ணாடியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார். அருகில் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார்அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.